DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 33/2025

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | மாலா |
| Father / Husband Name | பாஸ்கரன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 29**.05.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கிளியாநகரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் பகல் 08.00 மணிக்கு எங்கள் வீட்டில் உள்ள பனை மரத்தில் உள்ள பனம்பழம் ஆஜர் எதிரிகளின் வீட்டின் நிலத்தில் விழுந்தது சம்மந்தமாக சண்டை போட்டார்கள். நான் வீட்டில் இருந்தபோது திருவேங்கடம் என்பவர் என் கணவர் மீது கல்லை எடுத்து மூக்கு மற்றும் வாயில் அடித்தார். பின்னர் மயக்கம் போட்டு கீழே விழுந்துவிட்டார். மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் என் கணவரை என் மூத்தார் சிகிச்சைக்கு சேர்த்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் அனைத்தும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிடுகிறேன்.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 33/2025

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | பாஸ்கரன் |
| Father / Husband Name | பலராமன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 29**.05.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கிளியாநகரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன்.ஆஜர் எதிரிகளை தெரியும். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் பகல் 11.00 மணிக்கு நான் கழனியில் இருந்து வீட்டிற்கு வரும்போது என் மனைவி மாலாவுடன் ஆஜர் எதிரிகள் எங்கள் வீட்டில் உள்ள பனை மரத்தில் உள்ள பனம்பழம் அவர்களின் வீட்டின் நிலத்தில் விழுந்தது சம்மந்தமாக சண்டை போட்டார்கள். நான் கேட்டபோது திருவேங்கடம் என்பவர் கல்லை எடுத்து மூக்கு மற்றும் வாயில் அடித்தார். பின்னர் மயக்கம் போட்டு கீழே விழுந்துவிட்டேன். எண்டத்தூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் தையல் போட்டுவிட்டு மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சேர்ந்தேன். போலிசார் மருத்துவமனை வந்து என்னிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். ஆனால் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. மருத்துவமனையில் வைத்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. எந்த தேதியில் சம்பவம் நடந்தது என்றால் தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நடந்தது. புகாரை நான் எங்கு கொடுத்தேன் என்றால் சம்பவம் நடந்த அன்று மருத்துவமனையில் வைத்து புகார் மனு கொடுத்தேன். என்னை எந்த காவலர் வந்து விசாரித்தார் என்றால் பெண் காவலர் வந்து விசாரித்தார். எனக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் அடிக்கடி சண்டை வரும் என்றால் சண்டை வரும். சம்பவம் நடந்த அன்று 3 நாள் கழித்து பெண் காவலர் வந்து விசாரித்தார். என்னை எந்த கல்லால் அடித்தார் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் எனது வீட்டில் பல வருடங்களாக வசுத்து வருகிறேன். எதிரிகள் என் மீது வழக்கு தொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் இந்த வழக்கில் சமாதானமாக செல்கிறேன்.